**சாட்சிய வாக்கு மூலம்**

**(அத்தியாயம் 25 பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா)**

**பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர் ( வன்கொடுமை தடுப்பு ) சட்டம் -1989 -ன் வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம் ,**

**திருவாரூர் - 610 001**

**தேதி:** 04.09.2025

| | | |
|---|---|---|
| **சிறப்பு அமர்வு வழக்கு எண்.** | : | 32/2025 |
| **சாட்சியின் வரிசை எண்.** | : | அ.சா-2 |
| **சாட்சியின் பெயர்** | : | பாஸ்கரன் |
| **தந்தை பெயர்** | : | சின்னையன் |
| **கிராமம்** | : | செம்மங்குடி |
| **தாலுக்கா** | : | வலங்கைமான் |
| **தொழில்** | : | விவசாயம் |
| **வயது** | : | 65 |

2025 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 04 ஆம் நாள் ஆகிய இன்று இந்த நீதிமன்றத்தில் உதவியாளராக பணிபுரியும் திருமதி. ஆர். அன்பரசி அவர்களால் இந்த சாட்சிக்கு 1969 ம் ஆண்டு உறுதிமொழி சட்டத்தின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் சாட்சிய வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

எதிரி ஆஜர். அரசு வழக்கறிஞர் மற்றும் எதிரி வழக்கறிஞர் ஆஜராகி உள்ளனர்.

**<u>முதல் விசாரணை</u>**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். நான் இந்து கள்ளர் வகுப்பை சார்ந்தவர். அ.சா-1 சுந்தர்ராஜ் என்பவரை தெரியும். ஆஜர் எதிரியை தெரியும். அவர் கள்ளர்

வகுப்பை சார்ந்தவர். கடந்த 15.02.2025 ஆம் தேதி மாலை 3.30 மணியளவில் செம்மங்குடி புதுதெரு வழியாக வயலுக்கு சென்றபோது புதுதெருவில் வசிக்கும் ராஜா என்பவர் அ.சா-1-ன் வீட்டிற்கு அருகே வீடு கட்டிக்கொண்டிருக்கிறார். அ.சா-1-ன் வீட்டிற்கு வரும் மின்சார வயர் தாழ்வாக சென்று கொண்டிருந்தது. அப்போது எதிரி என் வீட்டு வயர் தாழ்வாக செல்வதாகவும், அதை மாற்றி கொடு என்று ராஜா என்பர் அ.சா-1 சுந்தர்ராஜ்-ரிடம் சொன்னார். அப்போது அ.சா-1 சுந்தர்ராஜ் எனக்கு ஈபி வேலை தெரியாது என்று சொன்னார். அப்போது ராஜா என்னை எதிர்த்து பேசிகிறாயா பற புண்ட மகனே, தேவடியா மகனே என்று பேசி கையால் அடித்தார். அ.சா-1 கீழே விழுந்துவிட்டார். அப்போது எதிரி ராஜா கோபம் தாங்காமல் செருப்பால் அ.சா-1 யை அடித்தார். மேலும் அருவாளை எடுத்து கொண்டு கீழே கிடந்த அ.சா-1ன் குரல் வளையில் கால் வைத்து மிதித்து கொண்டு அருவாளால் வெட்ட போனார். அருகில் இருந்த நான் ரமனன், சக்கரவர்த்தி ஆகியோர் சமாதானம் செய்து நீ சென்று போலீசாரிடம் புகார் கொடு என்று சொல்லி அனுப்பி வைத்தோம். மறுநாள் 16.02.2025 ஆம் தேதி காலை நன்னிலம் காவல் துணை கண்காணிப்பாளர் என்னை விசாரித்தார்கள் நடந்த விவரம்சொன்னேன்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**: இல்லை.

சாட்சி சொல்ல சொல்ல என் உத்தரவுப்படி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு பின் சாட்சியிடம் மேற்படி வாக்குமூலம் படித்துக் காண்பித்த போது சாட்சி சரியென்று என் முன்பாக கையொப்பம்செய்தார்.

VADIVEL M

Digitally signed by VADIVEL M
Date: 2025.09.04 17:31:07 +0530

அமர்வு நீதிபதி,

எஸ்.சி /எஸ்.டி (வன்கொடுமை தடுப்பு )

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு

நீதிமன்றம், திருவாரூர்.